பாரதீய ஜனதா கட்சி
(மத்திய அலுவலகம்)
11, அசோக் சாலை, புது டெல்லி 110001
தொ.பேசி.எண்: 23005700; தொலைநகல் : 23005787

ஜனவரி17,2012

டீசல் விலையை உயர்த்தும் அதிகாரத்தை பொதுத்துறை நிறுவனங்களிடம் மத்திய அரசு ஒப்படைத்துள்ளது குறித்து முன்னாள் பாஜக தலைவர் திரு.ராஜ்நாத் சிங்

டீசல்விலையை நிர்ணயம் செய்வது தொடர்பான அதிகாரத்தை பகுதியளவு பொதுத்துறை நிறுவனங்களிடம் தருவதாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அறிவித்திருப்பது சாதாரண குடிமகனின் மீது அக்கறையில்லாத தன்மையின் இன்னொரு வெளிப்பாடு ஆகும். எண்ணெய் நிறுவனங்களை அடுத்தடுத்த மாதங்களில் ரூ.9.60 வரை லிட்டருக்கு விலையை உயர்த்த அனுமதிப்பதன் மூலம் பொருளாதாரத்துக்கு மேலும் கடுமையான அடி விழும்.

இந்த அறிவிப்பு ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு எண்ணை விலை தொடர்பாக எந்தக் கொள்கையும் இல்லையோ என்று தோன்ற வைக்கிறது. சர்வதேச சந்தையில் விலை ஏற்றம் நடக்கும் போதெல்லாம் உடனடியாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு எதிர்வினை காட்டுகிறது.
நமது தேசத்துக்கு மக்களுக்கு உகந்த, பரந்த அளவிலான எண்ணை விலை நிர்ணயக் கொள்கை தான் இப்போதைய தேவை. விலைவீக்கத்தை ஏற்படுத்தாமல் சாதாரண ஜனங்களுக்கு நிம்மதியைத் தருவதாகவும் விவசாயிகளின் விவசாய பணிகளைப் பாதிக்காமலும் அக்கொள்கை இருத்தல் அவசியம். டீசல் விலைக்கு 10 ரூபாய் ஏற்ற முடிவு செய்திருப்பது, இந்நாட்டின் விவசாயிகளின் வாழ்க்கையில் மேலும் ஒரு அடியாகவே இருக்கும்.

அரசு தற்போதுள்ள எண்ணை விலை நிர்ணயக் கொள்கையை மறுபரிசீலனை செய்து, விலையை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை பகுதியளவு பொது நிறுவனங்களிடம் தரும் முடிவையும் திரும்பப் பெற வேண்டும்.

(ஓ.பி.கோஹ்லி)

*தலைமைநிலையப் பொறுப்பாளர்*